கவனிக்க.– 17.10.2025 ஆந் திகதிய 2459 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) மற்றும் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2460 - 2025 ඔක්තෝබර් මස 24 වැනි සිකුරාදා - 2025.10.24

2460 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 490 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 499 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2025, நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


489 - B 82731 - 403 (2025/10)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவில் (4) வது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட மானியப் பத்திரத்தை இரத்து செய்தல் - (104 உட்பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

தென் மாகாண சபையில் அம்பாந்தோட்டை மாவட்டம், லுணுகம்வெகர பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ இசங்க லக்மால் விக்ரமநாயக்க என்னும் நான் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) உட்பிரிவின் கீழ் அதிமேகு சனாதிபதியால் 1997.11.05 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள இலக்கம் ஹம்/11/பிரா 40249 கொண்ட மானிய பத்திரத்தின் உரிமையாளரான இலக்கம் 527, குடா கம்மான 03, இடக்கரை, பராக்கிரமபுர திஸ்ஸமஹாராமையில் வசிக்கும் ரத்னாயக வீரகோன் பியதாச இற்கு வழங்கி அம்பாந்தோட்டை மாவட்ட பதிவாளர் காரியாலயத்தில் இலக்கம் ஹம்/95/2334/98 இன் கீழ் 1998.07.27 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் காணப்படும் காணிக்கு பிரிதொருவராக சட்டப்படியாக உரிமையாளர் ஒருவர் இல்லாத படியால் அல்லது உரிமையாளர் ஒருவர் இருப்பினும் அவர் பிரதி ஒருவராக மாற விருப்பமின்மையாலும் பிரதி ஒருவராக ஒருவரை நியமிக்கவில்லை என அறிய கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அதன் சலுகை பத்திரம் அந்தச் சட்டத்தில் 104 ஆவது உட்பிரிவின் கீழ் இரத்து செய்ய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இதன் மூலம் அறியத் தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2025.11.14 ஆந் திகதிக்கு முன் என்னிடம் எழுத்து மூலம் அறியதர வேண்டும்.

**அட்டவணை**

அம்பாந்தோட்டை நிர்வாக மாவட்டம் லுணுகம்வெகர பிரதேச செயலாளர் பிரிவில் மாகம் பத்துவே/ பராக்கிரமபுர கிராம அதிகாரி பிரிவில் இடக்கரை குடா கம்மான 03 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் லுணுகம்வெகர பிரதேச செயலாளர் பொறுப்பில் உள்ள மற்றும் தொகுக்கப்பட்ட எண் ............... கொண்ட புலத்தால்/ ............. மூலம் தொகுக்கப்பட்ட எண் ........... கொண்ட துண்டு பிரிக்கப்பட்ட தொகுதியில்/ ................... மூலம் தொகுக்கப்பட்ட எண் ............. கொண்ட ரேகை குறிப்பில் இலக்கம் 592 வயல் கொண்ட நிலத் துண்டாக காட்டப்பட்டுள்ள அளவில் ஹெக்டயர்/ 01 றூட் ............. பெரிதாக கொண்டதும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைக்குட்பட்ட அரசாங்க காணியாகும்.

வடக்கு : 591 வயல் காணி;
கிழக்கு : இலக்கம் 45 கெத் எல;
தெற்கு : 593 வயல் காணி;
மேற்கு : ப (B) ஸ்னா எல.

ஐ. எல். விக்ரமநாயக்க,
பிரதேச செயலாளர்.
லுணுகம்வெகர.

பிரதேச செயலகம்,
லுணுகம்வெகர,
2025, யூலை 25.

10 - 266/1

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (04) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உறுதியாவணத்தை இரத்துச் செய்தல் - (பிரிவு 104) தொடர்பான அறிவித்தல்**

தென் மாகாண சபையில் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வீரகெட்டிய பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ காணி ஆணையாளர் நாயகத்தின் பிரதி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையிலான) இந்திக ருவன் குமாரவித்தாரண ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதியால் 1984 மாச்சு 23 ஆம் திகதி வழங்கப்பட்டதும், ஹம்/பிர/5853 ஆம் இலக்கத்தை உடையதும், கின்சி குணேவில் வசிக்கும் லியனராச்சிகே அந்துயாஸ் என்பவருக்கு வழங்கப்பட்டு, தங்கல்லை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 1988 ஏப்பிறல் 6 ஆம் திகதி 988 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு வாரிசு உரிமை கோர சட்டபூர்வமான உரிமையாளர் எவரும் இல்லாமையினாலோ அல்லது உரிமை உள்ளவர்கள் இருந்தும் அவர்கள் வாரிசாக வர விருப்பமில்லாமையினாலோ வாரிசுரிமை பெற எவரும் இல்லாத காரணத்தினால், மேற்படி நன்கொடைக் கடிதத்தை உத்தேச

சட்டத்தின் 18 (4) ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதை இதன் மூலம் அறியத் தருகிறேன். இது குறித்து ஏதேனும் ஆட்சேபனை இருப்பின், அது 2025.11.14 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட வேண்டும்.

**அட்டவணை**

ஹம்பாந்தோட்டை நிர்வாக மாவட்டத்தின் வீரகெட்டிய பிரதேச செயலகப் பிரிவுக்குட்பபட்ட வட கிரிவாபத்துவில் உள்ள கின்சிகுனே தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள : பிராமணயாகம கிராமத்தில் அமைந்துள்ள, களுதியவலயாய எனப்படும் காணி, - இன் பொறுப்பிலுள்ளதும், நில அளவை அத்தியட்சகரால் தயாரிக்கப்பட்ட இலக்கம் - கொண்ட புல வரைபடத்தில்/ - ஆல் தயாரிக்கப்பட்ட அ. கா. பி. 377 ஆம் இலக்க காணிப் பிரிப்புப் படவரைபடத்தில்/ - ஆல் தயாரிக்கப்பட்ட இலக்கம் - கொண்ட ரேகா பதிவேட்டில் 28 ஆம் இலக்க காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளது. இது 0.279 ஹெக்டயார் ரப்பளவைக் கொண்டுள்ளதுடன், கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு எல்லைகளைக் கொண்டுள்ளது.

வடக்கு : லொட் பன்னிரண்டு நுழைவு வீதியும்;
கிழக்கு : லொட் 29 ஆம் இலக்க நுழைவு வீதியும்;
தெற்கு : லொட் 33 ஆம் இலக்க நுழைவு வீதியும்;
மேற்கு : லொட் இலக்கம் 27 ஐ கொண்ட காணித்துண்டு ஆகும்.

ஐ. ஆர். கே. வித்தாரண,
பிரதேச செயலாளர்.
வீரகெட்டிய.

பிரதேச செயலகம்,
வீரகெட்டிய,
2025, ஓகத்து 05.

10 - 266/2

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமேல் மாகாண சபையின் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள அலவ்வ (தற்போது நாரம்மல) பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் எம். ஆர். எம். இம்ரான் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட் பிரிவின், கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1984.08.28 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள குரு/ப்ர 10064 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான மேரிமவுன்ட் வத்த, கடஹபொல, ஹொரொம்பாவ எனும் முகவரியில் வசிக்கும் முத்துகுட ஆரச்சிலாகே மதலேனாஹாமி என்பவருக்கு கையளிக்கப்பட்டு குருநாகல் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் எப் 38/2713/90 ஆம் இலக்கத்தின் கீழ் 1990.12.05 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபணைகள் இருந்தால் அவற்றை 2025.11.14 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

குருநாகல் நிர்வாக மாவட்டத்தின் அலவ்வ (தற்போது நாரம்மல) பிரதேச செயலாளர் பிரிவின் தம்பதெனி பற்றில்/ உடுகஹ வடக்கு கோறளையிலுள்ள 287 - ரம்முதுகல (தற்போது 1076 - தம்பகிரிகம மேற்கு) கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த திகன்தெனிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் அத்தியட்சகர் குருநாகல் என்பவரால் தயாரிக்கப்பட்டு இ. கி. வ. 219 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 70 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் - 0.238 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரசாங்க காணித்துண்டு மேரிமவுன்ட் வத்த

வடக்கு : காணித்துண்டு இல. 71;
கிழக்கு : உட்பிரவேசிக்கும் வழி மற்றும் காணித்துண்டு இல. 68;

தெற்கு : காணித்துண்டு இல. 69;
மேற்கு : காணித்துண்டு இல. 73.

எம். ஆர். எம். இம்ரான்,
பிரதேச செயலாளர்.
நாரம்மல.

பிரதேச செயலகம்,
நாரம்மல,
2025, மே 26.

10 - 267/1

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமேல் மாகாண சபையின் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள அலவ்வ (தற்போது நாரம்மல) பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் எம். ஆர். எம். இம்ரான் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட் பிரிவின், கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1984.08.22 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள குரு/ப்ர 08103 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான மேரிமவுன்ட் வத்த, கடஹபொல, ஹொரொம்பாவ எனும் முகவரியில் வசிக்கும் பிரஹ்மச்சாரி தாருகாபதி கணிதயலாகே செந்திரியா என்பவருக்கு கையளிக்கப்பட்டு குருநாகல் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் எப் 38/3427/94 ஆம் இலக்கத்தின் கீழ் 1994.08.03 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபணைகள் இருந்தால் அவற்றை 2025.11.14 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

குருநாகல் நிர்வாக மாவட்டத்தின் அலவ்வ (தற்போது நாரம்மல) பிரதேச செயலாளர் பிரிவின் தம்பதெனி பற்றில்/ உடுகஹ வடக்கு கோறளையிலுள்ள 287 - ரம்முதுகல (தற்போது 1076 - தம்பகிரிகம மேற்கு) கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த திகன்தெனிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் அத்தியட்சகர் குருநாகல் என்பவரால் தயாரிக்கப்பட்டு இ. கி. வ. 219 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 170 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் - 0.202 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரசாங்க காணித்துண்டு மேரிமவுன்ட் வத்த

வடக்கு : உட்பிரவேசிக்கும் வழி;
கிழக்கு : காணித்துண்டு இல. 194, உட்பிரவேசிக்கும் வழி;
தெற்கு : காணித்துண்டு இல. 194, கால்வாய் ஒதுக்கம்;
மேற்கு : காணித்துண்டு இல. 169 கால்வாய் ஒதுக்கம்.

எம். ஆர். எம். இம்ரான்,
பிரதேச செயலாளர்.
நாரம்மல.

பிரதேச செயலகம்,
நாரம்மல,
2025, மே 30.

10 - 267/2

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமேல் மாகாண சபையின் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) இலங்கரத்ன பதிராஜகே நுவன் பிரசாத் திலகரத்ன ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின், கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1987.05.18 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள குரு/ப்ர 16920 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான பல்லேகம, ஹல்மில்லவெவ எனும் முகவரியில் வசிக்கும் வனசிங்ஹ முதியன்சேலாகே உக்குமெனிகா என்பவருக்கு கையளிக்கப்பட்டு குளியாபிடிய மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் குளி/எச்/1/113 இலக்கத்தின் கீழ் 1988.10.25 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபணைகள் இருந்தால் அவற்றை 2025.11.14 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

குருநாகல் நிர்வாக மாவட்டத்தின் பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் தேவமெதி பற்றில் திஸ்ஸவ கோறளையிலுள்ள 1427 - யோதயாகன்த கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பல்லேகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு இலக்கம்/ ஆம் இலக்க வெளிக்களத் தாளில்/ என்பவரால் தயாரிப்பட்டு/ ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 2061 என்பவரால் தயாரிக்கப்பட்ட/ இரேகை வரைதலில் 56 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் ஹெக்டெயார்/ 0.402 விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரசாங்க காணித்துண்டு: காணியின் பெயர் கொஸ்கொல்லேஹேன

வடக்கு : காணித் துண்டு 53 வீதி;
கிழக்கு : காணித் துண்டு 57;
தெற்கு : அ. க. சி 2060 தம்பிடிகம கிராம எல்லை;
மேற்கு : காணித் துண்டு 55.

ஐ. பீ. என். பீ. திலகரத்ன,
பிரதேச செயலாளர்.
பண்டுவஸ்நுவர மேற்கு.

பிரதேச செயலகம்,
பண்டுவஸ்நுவர மேற்கு,
2025, சனவரி 23.

10 - 267/3

---

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆம் துணை பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட பிரதான பத்திரத்தை இரத்து செய்தல் - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமேல் மாகாண சபையின், குருநாகல் மாவட்டத்தின், பொல்பிதிகம பிரதேச செயலக பிரிவின், பிரதேச செயலாளரான டீ. எம். எஸ். தசநாயக்க ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) உட்பிரிவின் கீழ் அதிமேகு சனாதிபதியால் 1988.01.20 ஆம் திகதி ஒதுக்கப்பட்ட குரு/ ப 18823 எனும் இலக்கத்தைக் கொண்ட பிரதான பத்திரத்தின் உரிமையாளரான கோருவாவ யில் வசிக்கும் களுதன்த்திரி ஆரச்சிலாகே பொடி அப்புகாமிக்கு வழங்கப்பட்ட குருநாகல் மாவட்டப் பதிவாளர் அலுவலக இல. B/48/2584/91 இன் கீழ் 1991.11.08 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள நிலத்திற்கு

சட்டபூர்வ வாரிசு இல்லையென்பதால் அல்லது உரிமை உள்ள ஒருவர் இருந்தும் அவர் வாரிசாக இருக்க விருப்பமின்மை காரணமாக வாரிசுரிமைக்கு தகுதியற்றவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால் அதே கொடுப்பனவு பத்திரம் மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இது சம்பந்தமாக உங்களுக்கு ஏதேனும் ஆட்சேப்பனைகள் இருந்தால் 2025.11.14 ஆம் திகதிக்கு முன் எழுத்து பூர்வமாக எனக்கு தெரியப்படுத்துங்கள்.

**அட்டவணை**

வடமேல் மாகாணத்தின், குருநாகல் நிர்வாக மாவட்டத்தின் பொல்பிதிகம பிரதேச செயலாளர் பிரிவில் ஹிரியால ஹத் திவிகன்தகய இலக்கம் 84 கல்டென்வெவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள கோருவாவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவைத் துறைத் தலைவர் வசம் உள்ள மற்றும் நில அளவைத் துறைத் தலைவரால் தொகுக்கப்பட்ட 9 ஆம் எண் கொண்ட புலத்தாலில் ........... இனால் தயாரிக்கப்பட்ட இலக்கம் 1953 கொண்ட சதித்திட்டங்களை உடைக்கும் செயல்பாட்டில் ............ இனால் தொகுக்கப்பட்ட இலக்கம் ............ உள்ளடக்கிய கூட்டு விளக்கப் படத்தின் இலக்கம் 649 ஐக் கொண்ட நிலத்தின் ஒரு பகுதியாக காட்டப்பட்டுள்ள அளவில் ஹெக்டயர் 0.646 பர்ச்சஸ் ................ பரப்பளவைக் கொண்டது. கீழே காட்டப்பட்டுள்ள படி எல்லை இடப்பட்ட அரசாங்ல நிலம் களுகல்ல மூகலான (சேற்று நிலம்)

வடக்கு : துண்டுகள் இலக்கம் 644;
கிழக்கு : துண்டுகள் இலக்கம் 648;
தெற்கு : துண்டுகள் இலக்கம் 642;
மேற்கு : துண்டுகள் இலக்கம் 650.

டீ. எம். எஸ். தசநாயக்க,
பிரதேச செயலாளர்.
பொல்பிதிகம.

பிரதேச செயலகம்,
பொல்பிதிகம,
2025, யூன் 26.

10 - 267/4

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வெளியிடப்படுகின்ற அன்பளிப்பு பத்திரத்தை இரத்துச் செய்தல் - (104 ஆம் பிரிவு) கீழான அறிவித்தல்**

மத்திய மாகாணம் ஹாரிஸ்பத்துவ பிரதேச செயாலாளர் மொஹான் தர்மதாச ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 1994 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி அன்பளிக்கப்பட்ட இலக்கம் මධ්‍යම/හාප/111 கொண்ட அன்பளிப்பு பத்திரத்தின் உரிமையாளரான பிங்காஒய வத்த ஜனபதயில் வசிக்கும் பொல்வத்தே கெதர சைமன் என்வருக்கு அன்பளிப்பு செய்யப்பட்ட கண்டி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் எச். 199/179/236 இன் கீழ் 1986.02.18 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு வாரிசுரிமையாளராவதற்கு சட்டரீதியான உரிமையாளர் இல்லாமையினால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் வாரிசுரிமையாளராவதற்கு விருப்பமின்மையினால் வாரிசுரிமைக்கு நியமிக்க ஒருவரும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆதனால் மேற்குறித்த அன்பளிப்பு பத்திரத்தை மேற்குறித்த சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பில் எதிர்ப்புக்கள் ஏதும் இருப்பின். அவற்றை 2025.11.14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் எனக்கு தெரியப்படுத்தவும்.

**அட்டவணை**

கண்டி நிர்வாக மாவட்டத்தின் ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகப் பிரிவின் குழுகம்மன சியபத்துவ பொகலவெல மற்றும் ஹபுகொட கிராம அலுவலர் பிரிவின் ரணவன மற்றும் பல்லேபொகலவெல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் - கொண்ட கள பத்திரத்தில் இலக்கம் ஆ. வ. மஹ. 2536 கொண்ட வரைபட இலக்கம் 17 கொண்ட காணித்துண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ள. ஹெக் 0.209 அளவு கொண்ட கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்ட அரசாங்க காணி.

வடக்கு : கம்சபா பாதை மற்றும் ஹீ. பி. 102326;
கிழக்கு : ஹீ. பி. 102993;
தெற்கு : துண்டு இலக்கம் 17;
மேற்கு : கம்சபா பாதை.

மொஹான் தர்மதாச,
பிரதேச செயலாளர்.
ஹாரிஸ்பத்துவ.

பிரதேச செயலகம்,
ஹாரிஸ்பத்துவ,
2025, செத்தெம்பர் 08.

10 - 268/1

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள தெல்தொட்டை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடைப்பட்ட) கெதற கும்புரே கெதற துஷாரி தினூஷிகா கெதறகும்புரே ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ், அதிஉத்தமராம் சனாதிபதி அவர்களால் 1993.03.17 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்தியம/ பாஹெ/259 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளான கிராம்பே பல்லிய கும்புர குடியேற்றம் எனும் முகவரியில் வசிக்கும் மெதகெதர முதியன்சேலாகே முதுபண்டா என்பவருக்கு கையளிக்கப்பட்டு கண்டி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் LDO/G/1/31/93 ஆம் இலக்கத்தின் கீழ் 1993.09.17 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபணைகள் இருந்தால் அவற்றை 2025.11.14 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

கண்டி நிர்வாக மாவட்டத்தின் பாதஹேவாஹட்டை பிரதேச பிரதேசச் செயலாளர் பிரிவின் ஹேவாவிஸ்ஸ கோறலையிலுள்ள தீருவானாதெடிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கொடபிடிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் - என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு - ஆம் இலக்க வெளிக்களத் தாளில் பிரிக்கும் வரைபடத்தில் - என்பவரால் தயாரிக்கப்பட்ட மு. பி. மஹ. 2479 இரேகை வரைதலில் 24 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் ஹெக்டேயர் 0.24, விஸ்தீரணமுள்ளதும் கீழே தாப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரசாங்கக் காணித்துண்டு : கிராம்பே பல்லிய கும்புர

வடக்கு : கட்டி இல. 23;
கிழக்கு : மு. பி. ஏ. 1492/59;
தெற்கு : கட்டி இல. 25;
மேற்கு : கட்டி இல. 18, 17.

ஜி. கே. ஜி. ரி. டி. கெதறகும்புரே,
பிரதேச செயலாளர்.
தெல்தோட்டை.

பிரதேச செயலகம்,
தெல்தோட்டை,
2025, யூன் 09.

10 - 268/2

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள கொடைப்பத்திரத்தினை இரத்து செய்வதற்கான - (104 ஆம் பிரிவு) அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின், கண்டி மாவட்டத்தில், உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) ஆத்மா திலுக்ஷி ஜயரத்ன ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ் மாண்புமிகு சனாதிபதி அவர்களினால் இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டு ஒற்மாறோபர் மாதம் பதினாறாம் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/உப/3246 ஆம் இலக்க கொடைப்பத்திரத்தின் உரித்தாளராகிய பிட்டகந்த குடியிருப்பில், வசிக்கும் ரோனி எட்வேர்ட் அவர்களுக்கு வழஸ்கி கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல். டீ. ஓ. சீ. 33/72 ஆம் இலக்கத்தின் கீழ் 2008.01.04 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே குறப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதிலீட்டாளர் ஒருவராவதற்கு சட்டபூர்வமான உரித்தாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்தபோதிலும் அவர், பதிலீட்டாளராவதற்கு விருப்பமின்மையினால் பதிலீட்டாளராகப் பெயரிடுவதற்கு எவரும் இல்லை என அறிக்கையிடப்பட்டு உள்ளதனால் மேற்படி கொடைப்பத்திரத்தினை உரிய சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்து செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2025.11.14 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

**அட்டவணை**

கண்டி நிர்வாக மாவட்டத்தில் உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் கந்திகர இஹல பத்துவ/ கோரலேயில் பாரதெக கிராம அலுவலர் பிரிவில் பாரதெக என்ற பெயரினைக் கொண்ட கிராமத்தில் அமைந்துள்ளதும், மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட மூபி. மஹ. 4368 ஆம் இலக்க 106 ஆம் இலக்கக் காணித்துண்டு, அளவில் 0.090 ஹெக்டயார் விஸ்தீரணத்தை உடையதுமான, கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எல்லைகளைக் கொண்ட அரசாங்க காணி: பிட்டகந்த குடியிருப்பு

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 86, 85 மற்றும் 107;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 107, 85 மற்றும் 105;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 105, 104 மற்றும் 88;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 88, 87 மற்றும் 86.

ஆத்மா திலுக்ஷி ஜயரத்ன,
பிரதேச செயலாளர்.
உடபலாத்த கம்பளை.

பிரதேச செயலகம்,
உடபலாத்த கம்பளை.,
2025, மார்ச்சு 11.

10 - 268/3

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் அளிப்புச் செய்யப்பட்ட காணி அளிப்புப் பத்திரத்தை இரத்துச்செய்தல் (104 ஆம் இலக்க உட்பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்டகோளை பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் ஹேரத் முதியன்சேலாகே மேனக உபுல் பண்டார ஹேரத் ஆகிய நான் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் இலக்க உட்பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதி அவர்களால் 1983.12.09 ஆம் திகதி அளிப்புச் செய்யப்பட்ட மஹ/பிர/3363 இலக்கத்தையுடைய அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான மஹகந்த 1 குடியிருப்பில் வசிக்கும் திரானகமகே பொடி ஹாமினே என்பவருக்கு அளிக்கப்பட்ட கண்டி மாவட்ட பதிவாளர் காரியாலயத்தில் எல்டிஓ/சி/4/181 என்ற இலக்கத்தின் கீழ் 1988.05.23 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்கு சட்ட ரீதியான உரிமையாளர் எவரும் இல்லை என்பதனால் அல்லது சட்ட ரீதியான உரிமையாளர் இருப்பினும் அவர் பின்னுரிமையாளராவதற்கு விருப்பம் இல்லை என்பதனால் பினனுரிமையாளர் ஒருவர்

நியமிப்பதற்கு இல்லை என அறிக்கையிடப்பட்டு உள்ளமையினால் இவ் அளிப்புப் பத்திரத்தினை மேல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் இலக்க உட்பிரிவின் கீழ் இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2025.11.14 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு எழத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**மேற் கூறிய அட்டவணை**

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தின் கடவத்சத்தர மற்றும் உடபலாத கதுகர பஹலள கோரளை பிரதேச வருமான அதிகாரி பிரிவில் கண்டி மற்றும் கங்கவட்ட பட்டுவா கோரளை, ஹிந்தகல கிராம உத்தியோகத்தர் பிரிவின் பாஹியன்கமுவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் அட்தியட்சகரின் மூலம் தயாரிக்கப்பட்டதும் மற்றும் அவர் பொறுப்பில் உள்ள இலக்கம் 25/52 கொண்ட வெளிக்களப் பத்திரத்தில் இலக்கம் பி.பி.மஹ 203 கொண்ட வரைப்படக் குறிப்பில் இலக்கம் 53 கொண்ட நிலப் பகுதியாக காட்டப்பட்டுள்ள ஹெக்டெயார் ஏக்கர் இல்லை ரூட் 02 பர்சஸ் 06 ஆக பாரியளவில் உள்ள மஹகந்த 1 காலனி தரப்பட்டுள்ள முறையில் எல்லைகளை கொண்டதுமான அரச காணி பட்டியகேலே குடியிருப்பில்

வடக்கு : நுழைவாயில் மற்றும் துண்டு இல. 55;
கிழக்கு : துண்டு இல. 56 மற்றும் துண்டு இல. 57;
தெற்கு : துண்டு இல. 57 மற்றும் கள்கெடியேஹேன;
மேற்கு : துண்டு இல. 52 மற்றும் கள்கெடியேஹேன.

எச். எம். எம். யூ. பீ. ஹேரத்,
பிரதேச செயலாளர்.
கண்டி கடவத் கத்தர மற்றும்
கங்கவட்ட கோரளே.

பிரதேச செயலகம்,
கண்டி கடவத் கத்தர மற்றும்
கங்கவட்ட கோரள,
2025, யூலை 04.

10 - 268/4

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவு (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தை இரத்துச் செய்தல் - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மேல்மாகாண சபை, கம்பஹா மாவட்ட கட்டான பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் ஏ. எஸ். ஜே. பி. அத்துகோரலை ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட மூலத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ், அதிமேதகு சனாதிபதி அவர்களால் 1989.09.08 ஆந் திகதி கம்/பிர/கட்டா/10255 என்ற இலக்கத்தையுடைய அன்பளிப்பு பத்திரம், இல. 357/45, கல்வத்தை, ரத்தொலுவ, சீதுவை என்ற முகவரியை உடைய பட்டியகே மார்டின் பீரிஸ் என்பவருக்கு வழங்கப்பட்டு, நீர்கொழும்பு மாவட்ட பதிவாளர் காரியாலயத்தில் மீக/கட்டா/3/9 என்ற இலக்கத்தின் கீழ் 1991.01.03 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிக்கு சட்ட ரீதியான பின் உரித்தாளி ஒருவர் இல்லை அல்லது இருந்தும் அவர் உரிமை கோர விரும்பவில்லை போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இக்காணிக்கு சட்டரீதியான பின் உரித்தாளி ஒருவர் இல்லை அல்லது இருந்தும் அவர் உரிமை கோர விரும்பவில்லை போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இக்காணிக்கு சட்ட ரீதியான பின் உரித்தாளி ஒருவர் இல்லை எனக் கருதி மேற்படி அன்பளிப்பு பத்திரத்தை காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்து செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதை இத்தால் அனைவருக்கும் அறியத் தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2025.11.14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலமாக அறியத்தரவும்.

**அட்டவணை**

கம்பஹா நிருவாக மாவட்ட கட்டான பிரதேச செயலகப் பிரிவு ராகமை பத்துவை 199 ரத்தொலுவை கிராம அலுவலர் பிரிவில் ரத்தொலுவை என்ற ஊரில் அமைந்துள்ள, கட்டான பிரதேச செயலாளரின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட எல்/1/31, 39 என்ற இலக்கத்தையுடைய காணிப்பிரித்தெடுப்பு பத்திரத்தில் காணித்துண்டு இல. 88 என அடையாளப்படுத்தப்பட்டுள்ள 0.097 ஹெக்டயார் பரப்பளவைக் கொண்டுள்ள, பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ள அரச காணி.

வடக்கு : காணித்துண்டு இல. 89 மற்றும் 90;
கிழக்கு : காணித்துண்டு இல. 87;
தெற்கு : காணித்துண்டு இல. 86;
மேற்கு : பிரவேச வழி.

ஏ. எஸ். ஜே. பீ. அத்துகோரலை,
கட்டான பிரதேச செயலாளர்.
தெமங்கந்திய.

கட்டான பிரதேச செயலகம்,
தெமங்கந்திய,
2025, யூலை 30.

10 - 342/1

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவு (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அன்பளிப்பு பத்திரத்தை இரத்துச் செய்தல் - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மேலல்மாகாணம், கம்பஹா மாவட்டம், கட்டான பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் ஏ. எஸ். ஜே. பி. அத்துகோரலை ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட மூலத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ், அதிமேதகு சனாதிபதி அவர்களால் 1999.06.10 ஆந் திகதி கம்/பிர/கட்டா/942 என்ற இலக்கத்தையுடைய அன்பளிப்பு பத்திரம், இல. 395/7/9, வெரல்லவத்தை, கிம்புலாப்பிட்டிய என்ற முகவரியை உடைய விக்ரமசிங்க ஆரச்சிகே என்டனி அப்புஹாமி என்பவருக்கு வழங்கப்பட்டு, நீர்கொழும்பு மாவட்ட பதிவாளர் காரியாலயத்தில் மீக/கட்டா/8/4 என்ற இலக்கத்தின் கீழ் 1999.10.27 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிக்கு சட்ட ரீதியான பின் உரித்தாளி ஒருவர் இல்லை அல்லது இருந்தும் அவர் உரிமை கோர விரும்பவில்லை போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இக்காணிக்கு சட்ட ரீதியான பின் உரித்தாளி ஒருவர் இல்லை எனக் கருதி மேற்படி அன்பளிப்பு பத்திரத்தை காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்து செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதை இத்தால் அனைவருக்கும் அறியத் தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2025.11.14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலமாக அறியத்தரவும்.

**அட்டவணை**

கம்பஹா நிருவாக மாவட்டம் கட்டான பிரதேச செயலகப் பிரிவு தூனகஹபத்துவ 92 சி, மேற்கு கிம்புலாப்பிட்டிய கிராம அலுவலர் பிரிவில் வெரல்லவத்தை என்ற ஊரில் அமைந்துள்ள, கட்டான பிரதேச செயலாளரின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் ரீ. எஸ். ஈ. விஜேசூரிய அவர்களால் தயாரிக்கப்பட்ட 1090 ஆம் இலக்கத்தைக் கொண்ட காணிபிரித்தெடுப்பு பத்திரத்தில் காணித்துண்டு இல. 09 என அடையாளப்படுத்தப்பட்டுள்ள 20 பேர்ச்ச பரப்பளவைக் கொண்ட, பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ள அரச காணி.

வடக்கு : காணித்துண்டு இல. 10 மற்றும் 08;
கிழக்கு : காணித்துண்டு இல. 08;
தெற்கு : வீதி மற்றும் வெரல்லவத்தை;
மேற்கு : வெரல்லவத்தை மற்றும் காணித்துண்டு இல. 40.

ஏ. எஸ். ஜே. பீ. அத்துகோரலை,
கட்டான பிரதேச செயலாளர்.
தெமங்கந்திய.

கட்டான பிரதேச செயலகம்,
தெமங்கந்திய,
2025, ஓகத்து 01.

10 - 342/2

# நானாவித காணி அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/77190
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்:
HDLC/02/40/06/70.

### 21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலை பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்: 258, மெதகம கிராம அலுவலர் பிரிவின் மெதகம கிராமத்தில் காணி அலுவலரால் வரையப்பட்ட தோராயமான சுவட்டு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 02 ஏக்கர் 31 பர்ச்சஸ் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை விவசாய நடவடிக்கைக்காக திரு. மஹானாம திசாநாயக்க ரஞ்சித் பிரியந்த என்பவரின் பெயரில் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளன.

வடக்கு: தொன் கரோலிஸ், ஆர்.கே. எம். குணசேன, தொன் கொரனேலிஸ் மற்றும் ஆர். டீ. சாதியஸ் ஆகியோர் பயிரிடும் காணிகள்;
கிழக்கு: எம். டீ. ரஞ்சித் மற்றும் எம். டீ. லீலாவதீ ஆகியோர் பயிரிடும் காணிகள்;
தெற்கு: கிளைப் பாதை மற்றும் எம். டீ. லீலாவதீ பயிரிடும் காணி;
மேற்கு: கிளைப் பாதை மற்றும் தொன் கொரனேலிஸ் மற்றும் ஆர். டீ. சாதியஸ் ஆகியோர் பயிரிடும் காணிகள்.

03. கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** : முப்பது (30) வருடங்கள் (2025.07.23 முதல் முன்னோக்கி 30 வருடங்கள்)

(ஆ) **வருடாந்த குத்தகைத் தொகை** :- 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டில் காணிக்கான மேம்படுத்தப்படாத பெறுமதியின் 2% ஆகும். 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபா (ரூ. 5,000,000.00) அல்லது ஐந்து மில்லியன் ரூபாவிலும் அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டில் காணிக்கான மேம்படுத்தப்படாத பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

**தவணைத் தொகை** : தவணைத் தொகை அறவிடப்பட மாட்டாது;

(இ) குத்தகை பெறுபவர்களால் குத்தகை ஆரம்பித்து 01 வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகை பெறுபவர்களால் இந்தக் காணியை விவாசய நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிரைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகைகைய முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(எ) 2025.07.23 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் கழியும் வரை இந்தக் காணியை குத்தகைக்குப பெற்றுக்கொண்ட விடயத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கான உப குத்தகை அல்லது உரிமை மாற்றம் தவிர ஏனைய உப

குத்தகை அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகை செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொள்ளாதிருக்கும் சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்டனை வட்டி அறவிடப்படும்.

வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
"மிஹிகதத மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, ஒற்றோபர் 08.

10 - 292